# ஊடக வெளியீடு

## பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை – 2023

## பெறுபேறுகளை வெளியிடல்

2023 ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற மேற்படி பரீட்சையின் பெறுபேறுகள் 2023.11.16 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

- விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை - 338037
- தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை - 332949
- வெட்டுப்புள்ளிக்கு மேல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை - 50664

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

- ❖ பரீட்சார்த்திகளின் சரியான சுட்டெண்ணை உள்ளடக்குவதன் மூலம் பெறுபேற்றை பார்வையிட முடியும் என்பதுடன் உரிய பரீட்சைப் பெறுபேற்று அட்டவணையை தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
- ❖ உதவிப்பணம் பெற்றுக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை 20,000 என்பதுடன் அதில் 250 விசேட தேவையுடைய மாணவர்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ❖ பெறுபேறுகளை தீர்மானிக்கும் போது மாவட்ட நிலைகள் (District Rank) அல்லது நாடளாவிய நிலைகள் (Island Rank) **வழங்கப்படுவதில்லை.**
- ❖ பெறுபேறுகளை வெளியிடும் போது பரீட்சார்த்திகள் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகள் மாவட்டம், மொழிமூலங்களின் அடிப்படையில் உரிய வெட்டுப்புள்ளிகளுடன் குறிப்பிடப்படும்.
- ❖ விசேட தேவைத் தொகுதியின் கீழ் புலமைப்பரிசிலுக்கு உரித்தான பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளுடன் அவர்கள் புலமைப்பரிசில் பெற்றுக் கொண்டமைக்கான விசேட குறிப்பொன்றும் தரப்பட்டுள்ளது.

02. சகல அதிபர்களுக்கும் விண்ணப்பப்படிவங்களை அனுப்புவதற்காக தற்போது வழங்கப்பட்டுள்ள பயநர் பெயர் (User Name) , கடவுச்சொல் (Password) ஆகியவற்றைப் பயன்படுத்தி உரிய பாடசாலையின் பரீட்சைப் பெறுபேற்று அட்டவணையை தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகளின் பெறுபேற்று அட்டவணை பெறுபேற்று மீள் பரிசீலனையின் பின்னர் பாடசாலைகளுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

- ➢ https://onlineexams.gov.lk/eic இல் School Account Login இல் பிரவேசிக்கவும்.

03. சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் , வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள பயநர் பெயர் (User Name), கடவுச்சொல் (Password) ஆகியவற்றைப் பயன்படுத்தி தமது மாகாண/ வலயத்திலுள்ள சகல பாடசாலைகளினதும் பெறுபேற்றை தரவிறக்கம் செய்து கொள்வதற்கும் பார்வையிடுவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- ➢ https://onlineexams.gov.lk/onlineapps இல் Exam Result Sheets ஐ கிளிக் செய்யவும்.

04. எவரேனும் மாணவரொருவருக்கு புள்ளிகள் தொடர்பாக மீள் பரிசீலனை செய்துகொள்ள வேண்டிய தேவை இருப்பின் 2023 நொவம்பர் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 04 ஆம் திகதி வரை நிகழ்நிலை முறைமையில் மேன்முறையீட்டை சமர்ப்பிக்க முடியும்.

| விசாரணை | |
|---|---|
| நேரடி தொலைபேசி இலக்கம் | - 1911 |
| பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை | - 0112784208/ 0112784537<br>0112786616/ 0112785922 |

tamilguru.lk

எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்